# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No.147/2018 தேதி- 20.08.2025

(P.W.2) - ஜீவராஜன்

குறுக்கு விசாரணை

1. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் வா.சா.ஆ.12 ஆவணமான நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் மேக்காமண்டம் ரோடு காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ரோட்டைத்தொட்டு நீல வண்ணத்தில் காண்பிக்கப்பட்டுள்ள இவ்வழக்கின் பிரதிவாதி சொத்து என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்தின் கிழக்கினையாக நீல கோடிட்ட சொத்து சுசிலாபாய் சொத்து என்றால் சரிதான். மேற்சொன்ன நீல கோடிட்ட சொத்தான சுசிலாபாய்யின் சொத்துதான் இவ்வழக்கின் பட்டிகை சொத்து என்றால் சரிதான். ஏ-பட்டிகை சொத்திற்கு தெற்கினையாக Brown Colour-ல் ஒரு வழிப்பாதை காண்பிக்கப்பட்டுள்ளது என்றால்சரிதான். மேற்சொன்ன வழிப்பாதை தெற்கினையாக சென்று மிஞ்சபாறவை சென்று முடிகிறது என்றால் சரிதான். மேற்சொன்ன வழிப்பாதையின் அகலம் எவ்வளவு என்றால் 10 அடி ஆகும். மேற்சொன்ன பாதை வடக்கினையாக ஏ-பட்டிகை சொத்தை தாண்டி செல்கிறது என்றால் சரிதான். மேற்சொன்ன வடகினையாக உள்ள பாதை எங்கு சென்று முடிகிறது என்றால் மேக்காமண்டம் சென்று முடிகிறது.

2. பிரதிவாதியின் சொத்திற்கு வடகினையாக மஞ்சள் நிறத்தில் காண்பித்துள்ள பாதை இல்லை என்றால் சரியல்ல பாதை உள்ளது. ஏ-பட்டிகை சொத்தில் எவ்வளவு தொலைவில் இருந்து என்னுடைய சொத்து அமைந்துள்ளது என்றால் 300 அடி தொலைவில் உள்ளது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.12 ஆவணமான நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் என்னுடைய சொத்து காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் காண்பிக்கப்பட்டுள்ளது. என்னுடைய சொத்தில் இருந்து Brown Colour பாதையாக காண்பித்துள்ள பாதையை சென்றடைய முடியுமா என்றால் முடியும். மேற்சொன்ன Brown Colour பாதையில் இருந்து மேக்காமண்டம் செல்ல முடியும் என்றால் சரிதான். எனவே பிரதிவாதியின் சொத்தில் மஞ்சள் நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது பாதையே இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணத்தில் மஞ்சள் நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பாதை பொய்யாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி சுசிலாபாய்க்கு ஜெசிலேட் என்று மற்றொரு பெயர் உள்ளது என்றால் சரிதான். ஏ-பட்டிகை சொத்திற்கு மேற்கினையாக

சுசிலாபாய் சொத்து உள்ளது என்றால் இல்லை அவருடைய மகன் விஜயகுமார்க்கு சொத்து உள்ளது. விஜயகுமாரின் சொத்தாக சொல்லப்படும் சொத்திற்கு சர்வே எண்.42/12B என்றால் சரிதான்.

3. மேற்சொன்ன சொத்து சுசிலாபாய் தன் மகன் விஜயகுமாருக்கு கொடுத்த சொத்து என்றால் சரிதான். மேற்சொன்ன சுசிலாபாய் பெயரில் சொத்து இருந்த போது இதே பிரதிவாதியின் பெயரில் அசல் வழக்கு எண்.38/2009 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன வழக்கு பிரதிவாதியின் சொத்தான நீசர்வே எண்.41/6A க்கு வழிப்பாதை உள்ளதாகவும், அவ்வழியாக மின் இணைப்பு வழங்கக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. அவ்வழக்கை வாதி ஜெனிலேட் என்ற பெயரில் தாக்கல் செய்திருந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. அவ்வழக்கில் வாதிக்கு எதிராக எதிர்க்கோரிக்கை மனுவில் சர்வே எண்.41/6A ல் சொத்தில் அத்துமீறி நுழைய கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. தற்போது வாதி அதே சொத்துடன் வேறு ஒரு சொத்தை சேர்த்து பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

4. ஏற்கனவே வாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை வாதிக்கு எதிராக நிலுவையில் உள்ளதால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்ய அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.மேற்சொன்ன வழக்கின் மீது மேல்முறையீடு ஏதும் செய்யவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இறுதிநிலை அடைந்துவிட்டதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட பரிகாரம் என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.